ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1994/20 - 2016 නොවැම්බර් මස 21 වැනි සඳුදා - 2016.11.21

*1994/20 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 6 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2016, நவெம்பர் 21.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 07.03 | 0703.10.10 | சிறிய வெங்காயங்கள் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |
| 2. | 08.04 | 0804.10.10 | பேரீச்சம் பழங்கள் - புதியவை | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 60.00 |
| | | 0804.10.20 | பேரீச்சம் பழங்கள் - சாறு இல்லாத காய்ந்த | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 60.00 |
| 3. | 08.06 | 0806.20 | திராட்சை பழங்கள் - உலர்த்தியவை | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 230.00 |
| 4. | 09.09 | 0909.31 | நற்சீரகம் - நசுக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 162.00 |
| | | 0909.32 | நற்சீரகம் - நசுக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 162.00 |
| 5. | | 0909.61.20 | பெருஞ்சீரகம் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 162.00 |

12 - 522